## வினா எண் :: 6.1.4.3.H

**இரு எண்களை ஒப்பிடுதல் - பயிற்சி**

மனோவின் கடந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களின் வரவும் செலவும் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தந்த மாதங்களில் செலவு போக மீதம் வரும் தொகையை மனோ அவனுடைய கிராமத்தில் உள்ள தபால் அலுவலகத்தில் தொடங்கிய அவனுடைய சேமிப்புக்கணக்கில் செலுத்துவதை வழக்கமாகக்கொண்டிருந்தான்.

**மனோவின் முதல் எட்டு மாத வரவு செலவு விவரம்**

| வரிசை எண் | மாதங்கள் | தொகைகள் ₹-ல் | |
|---|---|---|---|
| | | வரவு | செலவு |
| 1 | ஜனவரி | 37,567 | 30,587 |
| 2 | பிப்ரவரி | 48,906 | 44,820 |
| 3 | மார்ச் | 22,564 | 20,673 |
| 4 | ஏப்ரல் | 19,532 | 14,842 |
| 5 | மே | 53,564 | 44,821 |
| 6 | ஜூன் | 37,281 | 29,053 |
| 7 | ஜூலை | 21,863 | 20,164 |
| 8 | ஆகஸ்ட் | 57,872 | 54,044 |

## வினா

மேலே கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் அடங்கிய அட்டவணையின் அடிப்படையில், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.

(A) 8 மாதங்களில் மனோவினுடைய மொத்த வரவு எவ்வளவு?

(B) 8 மாதங்களில் மனோவினுடைய மொத்தச்செலவு எவ்வளவு?

(C) மிக அதிக வரவு இருந்த மாதம் எது?

(D) மிகக்குறைந்த வரவு இருந்த மாதம் எது?

(E) மிக அதிக செலவு செய்த மாதம் எது?

(F) மிகக்குறைந்த செலவு செய்த மாதம் எது?

## விடை காணும் பகுதி

(A) மற்றும் (B) ஆகிய வினாக்களின் விடைகளைக்கண்டு பிடிப்பதற்கு அட்டவணையில் உள்ள மாதாந்திர வரவு செலவுகளின் கூட்டுத்தொகையை கண்டுபிடிக்க வேண்டும்.

**மனோவின் முதல் எட்டு மாத வரவு செலவு மற்றும் சேமிப்பு விவரம்**

| வரிசை எண் | மாதங்கள் | தொகைகள் ₹-ல் | | |
|---|---|---|---|---|
| | | வரவு | செலவு | சேமிப்பு |
| 1 | ஜனவரி | 37,567 | 30,587 | 6,980 |
| 2 | பிப்ரவரி | 48,906 | 44,820 | 4,086 |
| 3 | மார்ச் | 22,564 | 20,673 | 1,891 |
| 4 | ஏப்ரல் | 19,532 | 14,842 | 4,690 |
| 5 | மே | 53,564 | 44,821 | 8,743 |
| 6 | ஜூன் | 37,281 | 29,053 | 8,228 |
| 7 | ஜூலை | 21,863 | 20,164 | 1,699 |
| 8 | ஆகஸ்ட் | 57,872 | 54,044 | 3,828 |
| **மொத்தத்தொகை** | | **2,99,149** | **2,59,004** | **40,145** |

## (A)-ன் வினாவும் விடையும்

8 மாதங்களில் மனோவினுடைய மொத்த வரவு எவ்வளவு?

8 மாதங்களில் மனோவினுடைய மொத்த வரவு **₹2,99,149** ஆகும்.

## (B)-ன் வினாவும் விடையும்

8 மாதங்களில் மனோவினுடைய மொத்தச்செலவு எவ்வளவு?

8 மாதங்களில் மனோவினுடைய மொத்தச்செலவு **₹2,59,004** ஆகும்.

## (C)-ன் வினாவும் விடையும்

மிக அதிக வரவு இருந்த மாதம் எது?

மிக அதிக வரவு இருந்த மாதம் **ஆகஸ்ட்** ஆகும்.

## (D)-ன் வினாவும் விடையும்

மிகக்குறைந்த வரவு இருந்த மாதம் எது?

மிகக்குறைந்த வரவு இருந்த மாதம் **ஏப்ரல்** ஆகும்.

## (E)-ன் வினாவும் விடையும்

மிக அதிகச்செலவு செய்த மாதம் எது?

மிக அதிகச்செலவு செய்த மாதம் **ஆகஸ்ட்** ஆகும்.

## (F)-ன் வினாவும் விடையும்

மிகக்குறைந்த செலவு செய்த மாதம் எது?

மிகக்குறைந்த செலவு செய்த மாதம் **ஏப்ரல்** ஆகும்.

Sum & solution prepared on Thursday 6th May, 2021 :: 06:21 Hrs.
All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.